**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் - 2018**

---

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கை இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1. நிதிக்கூற்றுக்கள**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடாபான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில்லாத காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**1.2 நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நியதிச்சட்ட சபைகளில் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்று டனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிச் சட்டம் மற்றும் 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க | ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக் காக ரூபா 25 தொகையான | தெளிவான பதிலொன்று தெரிவித்திருக்கவில் லை. | முத்திரைக் கட்டணங்க ள் வர்த்தமானி யின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானி | முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டிய போதிலும் 10 சந்தர்ப்பங்களில் ரூபா 1,646,130 ஆன கொடுப்பனவுகளுக்குரிய முத்திரைக் கட்டணங்கள் கழிக்கப்பட்டிருக்கவில்லை. | | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104 மற்றும் 105 | 2018 ஆம் ஆண்டில் 05 சந்தர்ப்பங்களில் அதிகார சபையின் வாகனங்களுக்கு விபத்து ஏற்பட்டிருந்த போதும் அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 மற்றும் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு பொருத்தமான உத்தியோகத்தர்கள் இல்லாதிருந்தமையால் நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. இவ்வாண்டில் இச் செயற்பாட்டை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | சேதங்கள் தொடர்பாக அறிக்கையிடுவதற்காக சேதங்கள் நட்ட பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகளை நாளது வரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 395(ஈ) | வங்கிக் கணக்கொன்றுள்ள ஒவ்வொரு திணைக்களத்தினா | வங்கி கணக்கிணக்க கூற்று தயாரித்து பூர்த்தி | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | லும் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் உள்ள கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் வங்கி கணக்கிணக்க கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையால் 2018 ஆம் ஆண்டிற்குரிய வங்கி கணக்கிணக்க கூற்று தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | நிதிப் பிரமாணம் 507 மற்றும் 756 | திசெம்பர் மாதம் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக இவ்வறிக்கை திகதி வரை பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பொருள் மெய்மையாய்வு செயற்பாடு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழங்கப்பட்ட முற்பணத் தொகையை மிகைத்து செலவிடப்பட்ட 24 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அதன் பெறுமதி ரூபா 123,064 ஆக இருந்தது. இதில் 19 சந்தர்ப்பங்களில் ரூபா 1,000 முதல் ரூபா 29,860 வரையான அளவொன்று கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. | முற்பணத் தொகைக்கு கூடுதலாக செலவினம் மேற்கொள்ள வேண்டாமென ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | பெற்றுக்கொண்ட முற்பண எல்லைக்குள் செலவினம் மேற் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட சேமிக்கப்பட்ட 22 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்ட துடன் அப்பெறுமதி ரூபா 414,211 ஆக இருந்தது. இது சதவீதமாக வழங்கப்பட்ட முற்பணத்தில் 40 சதவீதமாக இருந்தது. | இத்தொகை முற்பணமாக வழங்கப்பட்டுள்ளமையால் சில சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள முற்பணம் சேமித்தல் இடம்பெறும். நிறுவகத்தினால் முற்பணத்தை பெற்றுக்கொள்ளும் நபர்களுக்கும் முற்பணம் வழங்கப்படும் பிரதேச செயலகங்களுக்கும் மாவட்ட செயலகங்களுக்கும் தேவையான அளவில் மாத்திரம் முற்பணத்தை வழங்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவையான தொகைக்கு மாத்திரமே முற்பணமாக வழங்கப்பட வேண்டும். |
| (இ) | நி.பி 371 இன் பிரகாரம் உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்பட்ட முற்பணமொன்று வழங்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்த உடனே தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் 14 சந்தர்ப்பங்களின் போது ரூபா 135,318 பெறுமதியான முற்பணம் தேவையான திகதிக்கு கருத்திற் கொள்ளக்கூடிய நாட்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்ததுடன் 27 சந்தர்ப்பங்களின் போது ரூபா 377,818 தொகையான முற்பணம் 1 ½ மாதங்கள் முதல் 3 மாதங்கள் தாமதத்தின் | சில பிரதேச செயலகங்கள் முற்பணத்தை கோரி பணம் கிடைத்தன் பின்னரே குறித்த நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துகின்றன. ஏதேனும் காரணத்தினால் பணம் கிடைக்காமல் போனால் அவர்களிடமுள்ள பணமும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உள்ள பணமாக இருப்பதால் அப்பணத்தைக் கொண்டு வேறு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ள முடியாது என அதற்கான காரணமாக குறிப்பிடுகின்றனர். இதனால் முற்பணத்தை முன்னரே பெற்றுக் கொள்ள இடம்பெறுகின்றது. மேலும் முற்பணத்தொகை குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு 14 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பின்னர் தீர்வு செய்யப்பட்டிருந்தது. | நாட்களுக்குள் அல்லது அதற்கு முன்னர் முற்பணத்தை தீர்வு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிகழ்ச்சித்திட்டம் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு வாரத்திற்கு முன்னர் முற்பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் இந்நிலைமையை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. | |
| (ஈ) | முற்பணமாக 2016 ஆம் ஆண்டின் போது 33 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 10,269,812 தொகையும் 2017 ஆம் ஆண்டில் 344 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 101,985,806 தொகையும் 2018 ஆம் ஆண்டின் போது 382 சந்தர்ப்பங்களிலும் வழங்கப்பட்டிருந்த ரூபா 8,772,256 தொகையும் 2019 திசெம்பர் 05 ஆந் திகதி வரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2016,2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதால் பிரதேச செயலகங்களிலிருந்தும் மாவட்ட செயலகங்களிலிருந்தும் இத்தொகைகளை தீர்ப்பதற்குரிய பட்டியல்கள் அனுப்பி வைக்கப்படா திருந்ததுடன்(அவர்கள் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியுள்ளனர்) அதற்காக நிறுவகத்தின் உத்தியோகத்தர்களை கொண்டு குறித்த பிரதேச செயலகங்களுக்கு சென்று அப்பட்டியல்களைப் பெற்றுக் கொண்டு முற்பணத்தை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதுடன் இதுவரை கருத்திற் கொள்ளக்கூடிய முற்பணம் தீர்வு செய்யப்பட்டுள்ளது. | முற்பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2017 ஆகஸ்ட் மாதம் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 233,731 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் அனுப்பியிருக்கவில்லை. | கடன்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.3 சிக்கமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அலுவலக இடவசதிகளை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்காக பெறுகை அறிவித்தலொன்று 2017 ஒக்தோபர் 02 ஆந் திகதி வெளியிடுவதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 49,507 செலவிடப்பட்டிருந்ததுடன், அவ்விளம்பரத்திற்குரிய கேள்வி பொறுப்பேற்றலின் இறுதி திகதியை நீடிப்பதற்காக மீண்டும் ரூபா 48,300 செலவிடப்பட்டிருந்த போதும் பின்னர் அமைச்சு அலுவலக கட்டிடத்திலேயே அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக ஆலோசணை கிடைத்தமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 97,807 ஆன செலவினம் சிக்கனமற்ற செலவினமொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அலுவலக இடவசதிகளை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்காக பெறுகை அறிவித்தலொன்று 2017 ஒக்தோபர் மாதத்தில் வெளியிடப்பட்டிருந்த போதும் அதற்காக எவ்வித பொறுப்பேற்றல் ஒன்றும் கிடைக்காமையால் கேள்வியை பொறுப்பேற்றல் திகதியை நீடிப்பதற்கு நேர்ந்தது. எனினும் அந்த விளம்பரத்திற்கு கிடைத்த கேள்விகள் நிர்ணயிக்கப்பட்ட வகையில் கிடைக்காமையாலும் இவ்வளவிலே எமது அலுவலகத்தை நடாத்திச் செல்லுமாறு அமைச்சின் ஆலோசணை கிடைத்தமையால் புதிய அலுவலக வளவினை பெற்றுக்கொள்ளல் நிறுத்தப்பட்டது. | முறையான திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 32 ஆகவும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை 19 ஆக இருந்தன. 13 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் அனுப்பியிருக்க வில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அதிகாரசபையின் சாரதி ஒருவர் கைத்தொழில் மற்றும் வர்த்தக செயற்பாடுகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2018 மே மாதம் வரை சம்பளம் மற்றம் படிகளாக ரூபா 191,624 தொகையும் மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினமாக ரூபா 52,901 உமாக அதிகார சபையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் அதிகாரசபையினால் கோரப்பட்டிருந்த போதும், அமைச்சினால் அச்செலவினம் மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறோம் | அமைச்சினால் அச்செலவினம் மீள்நிரப்பப்பட வேண்டும். |
| (இ) | 02 தொழில் முயற்சி மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 06 தொழில் முயற்சி மேம்படுத்தல் உதவியாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு 2017 செப்தம்பர் மாதம் பத்திரிகை விளம்பரமொன்றை வெளியிடுவதற்காக ரூபா 163,760 மற்றும் 02 தொழில் முயற்சி மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 08 தொழில் முயற்சி மேம்படுத்தல் உதவியாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு 2018 செப்தம்பர் மாதம் பத்திரிகை விளம்பரமொன்றை வெளியிடுவதற்காக ரூபா 178,106 தொகையும் உதவி பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்காக 2018 யூன் மாதம் ரூபா 137,856 தொகை செலவிட்டு பத்திரிகை விளம்பரமொன்று | 02 தொழில் முயற்சி மேம்படுத்தல் உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் 06 தொழில் முயற்சி மேம்படுத்தல் உதவியாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு முதலில் பரீட்சைத் திணைக்களத்தின் ஊடாக போட்டி பரீட்சையொன்று நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அப்போது பரீட்சை திணைக்களத்தின் கடமைப் பழு காரணமாகவும் அதன் பரீட்சை நடாத்தும் நடைமுறையில் சிக்கல்கள் காணப்பட்டமையால் பரீட்சை நடாத்துவதற்கு தாமதம் ஏற்பட்டது. ஆதலால் போட்டிப் பரீட்சையொன்று நடாத்தாமல் கட்டமைப்பு ரீதியான நேர்முக பரீட்சை யொன்று மூலம் ஆட்சேர்ப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்தது. இதற்காக 2018/09/27 ஆந் திகதி பத்திரிகை விளம்பரமொன்று ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன | அங்ககரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வெளியிடப்பட்டிருந்த போதும் அப்பதவிகளுக்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 01 உதவிப் பணிப்பாளர் பதவி, 01 முகாமைத்துவ உதவியாளர், 01 அலுவலக உதவியாளர் பதவிகளுக்காக முறையே பத்திரிகை விளம்பரம் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் மூலம் விண்ணப்பங்கள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட அரசியல் நிலைமை காரணமாக அனைத்து ஆட்சேர்ப்பும் இடை நிறுத்தப்பட்டிருந்தன. | |

**3. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**3.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபை பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் 2018 ஆம் ஆண்டிலும் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | |
| • சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வெளிநாட்டு சந்தைகளில் வெற்றி பெறுவதற்கு முடியுமான உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களை சர்வதேசமயப்படுத்தும் நோக்கில் தொழில் முயற்சியாளர்களை இலங்கைக்கு வெளியே இருப்பதற்கும் செயற்படுவதற்கும் அக்கரை செலுத்துவதற்காக ஊக்குவித்தல் | தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளை உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு தொடர்பு படுத்துவுதற்கும் சந்தை வெற்றிகளுக்காக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தப் படுகின்றன. விசேடமாக புதிய உற்பத்திகளை ஏற்படுத்துவது உட்பட உற்பத்திகளின் தரம் மற்றும் பெறுமதியை கூட்டும் பொருட்டு பயிற்சி | சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உட்பட வழிகாட்டல் அதிகாரசபை மேற் கொள்ளப்படுகின்றது. இதனூடாக உள்நாட்டு உற்பத்தியாளர்கள் வெளிநாட்டு சந்தைகளை வெற்றிகொண்டுள்ளதுடன் இந்த உற்பத்திகளுக்காக சர்வதேச ரீதியான அங்கீகாரம் கிடைத்துள்ளது. | |
| • தொழில்நுட்ப வளர்ச்சி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் ஆக்கஉரிமை என்பன வணிகமயப்படுத்தலுக்குரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மேம்படுத்தலுக்காக தொழில்நுட்ப அபிவிருத்த நிதியமொன்ற தாபிக்கப்பட வேண்டும். | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு இடையே உற்பத்தி அபிவிருத்தி மேம்படுத்தல் மற்றும் ஆக்கஉரிமை என்பவற்றிற்காக வழிகாட்டுவதற்காக வசதிகள் அதிகாரசபை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தேவையான தொழில்நுட்ப அறிவும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக வழங்கப்படுகின்றன. இந்த தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மேலும் வெற்றிகரமாக்குவதற்காக தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியமொன்றை தாபிப்பதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு செயற்திட்ட முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதற்காக இதுவரை அங்கீகாரம் வழங்கியிருக்கவில்லை. ஆதலால் இந்நிதியம் தாபிப்பதற்காக அடிப்படையான எசெல்வத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இயலுமையொன்று கிடைத்திருக்கவில்லை. | சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகளின் முன்னேற்றம் பின்வருமாறு காணப்பட்டது. | | |
| (i) | வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களுக்கும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களுக்கும் தகவல்களை வழங்குவதற்காக வியாபார அபிவிருத்தி சேவை பெயர் வழிகாட்டியொன்று தயாரிப்பதற்கு திட்டமிட்டு அதற்காக ரூபா 500,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 ஆந் தகிதி வரை ரூபா 570,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது . எனினும் அப்பெயர் வழிகாட்டி அச்சிடப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் 05 ஆந் திகதி வரை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2018 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட வியாபார அபிவிருத்தி சேவை பெயர் வழிகாட்டி யில் திருத்தங்கள் பல மேற்கொள்ளப் பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டின் போது சிங்களம் மற்றும் தமிழ மொழிகளுக்கு மொழி பெயர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் இந்த சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் 5000 பிரதிகள் அச்சிடப்பட்டு 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பகிர்நதளிப்பதற்கு தீட்டமிடப்பட்டுள்ளது. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 50 வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் இயலளவை அபிவிருத்தி செய்வதற்காக பயிற்சி வழங்குவதற்காக ரூபா 500,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் 27 வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் மாத்திரம் பயிற்சியளிக்கப்பட்டிருந்த துடன் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடுகளில் 26 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் இயலளவை அபிவிருத்தி செய்வதற்காக விசேடமாக மனித வள அபிவிருத்திக்காக தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. 2018 ஆம் ஆண்டில் 50 வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் இயலளவை அபிவிருத்தி செய்வதற்காக பயிற்சி வழங்குவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. இப்பயிற்சிகளை வழங்குவதற்கு முன்னர் | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் இலக்குகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிகாரசபையினால் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்களின் தேவையை இனங்கண்டும் பயிற்சி தேவைப்பாட்டை இனங்கண்டு கொள்வதற்காக கூடுதலான காலமொன்று தேவைப்படுகின்றது. பின்னர் 2018 ஆம் ஆண்டின் போது இரண்டு நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டிருந்த போதும் ஒரு நிகழ்ச்சி மாத்திரமே செயற்படுத்தப்பட்டதுடன் அதற்காக 27 வியாபார அபிவிருத்தி சேவை வழங்குனர்கள் தொடர்புபட்டனர். | |
| (iii) | வியாபார சிக்கல்களை தீர்வு செய்வதற்காக மாவட்ட மற்றும் பிரதேச தொழில் முயற்சிகள் அமைப்பினை தாபிப்பதற்கும் கூட்டங்களை நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதும் பிரதேச அமைப்புக்களை தாபிப்பதற்கு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதும் 2018 ஆம் ஆண்டில் புதிதாக எவ்வித வியாபார மாவட்ட மற்றும் பிரதேச தொழில் முயற்சிகள் அமைப்புக்கள் தாபிக்கப்படாதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்டத்தில் மாத்திரம் மாவட்ட தொழில் முயற்சிகள் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. | வியாபாரத்தில் தோன்றும் வியாபார சிக்கல்களை தீர்வு செய்யும் நோக்கில் பிரதேச மற்றும் மாவட்ட தொழில் முயற்சிகள் அமைப்புக்களை பிரதேச ரீதியாக கோட்ட மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் செயற்படுகின்றன. 14 மாவட்ட வியாபார அமைப்புக்கள் 2018 ஆம் ஆண்டு வரை தாபிக்கப்பட்டிருந்தன. மாவட்ட வியாபார தொழில் முயற்சிகள் அமைப்புக்களின் தலைமை மாவட்ட செயலாளர் வகிப்பதுடன் அமைப்பினை தாபித்தல் மற்றம் வெற்றியை செயற்படுத்துவதற்கு அவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியம் வாய்ந்தது. சில மாவட்ட செயலாளர்கள் இதற்காக விருப்பமில்லா திருப்புதடன் அவர்களின் விடயப்பரப்பிலும் இது உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. இதனால் சில மாவட்டங்களில் அமைப்பொன்று தாபித்தல் | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் இலக்குகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் பேணிச்செல்லல் சிக்கலாக உள்ளது. அநேகமான அமைப்புக்களின் செலவினம் மாவட்ட செயலகத்தின் நிதிஏற்பாடு கள் மூலம் தீர்வு செய்யப்பட்டதுடன் அவ்வாறில்லாத மாவட்டங்களில் செலவினம் அதிகாரசபை மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. தாபிக்கப்பட்டுள்ள 14 மாவட்டங்களில் கூட்டங்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (v) | பட்டதாரி தொழில் முயற்சியாளர் எழுச்சியின் கீழ் 150 பட்டதாரிகளை பயிற்சியளிப்பதற்கும் 25 பேருக்கு நிதி உதவி வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டு ரூபா 4.5 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் 205 பட்டதாரிகளை பயிற்சியளிக்கப்பட்டு 13 பேருக்கு மாத்திரம் ரூபா 1,825,000 நிதி உதவியாக வழங்கப்பட்டிருந்தது. | பட்டதாரி தொழில் முயற்சியாளர் எழுச்சியின் கீழ் 150 பட்டதாரிகளை பயிற்சியளிப்பதற்கும் 25 பேருக்கு நிதி உதவி வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டு ரூபா 4.5 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது 205 பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டதுடன் நிதி உதவி வழங்குவதற்கு 25 பேர் இனங்காணப்பட்டனர. எனினும் அதிகாரசபைக்கு அவ்வாண்டின் போது கிடைத்த நிதி ஏற்பாட்டின் பேரில் 2018 ஆம் ஆண்டில் 13 பேருக்கு மாத்திரம் நிதி உதவி வழங்ககூடியதாக இருந்தது. எஞ்சிய பட்டதாரிகளுக்காக 2018 ஆம் ஆண்டின் போது நிதி உதவி வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்காக ரூபா 4.5 மில்லியன் நிதிஏற்பாடு மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் இலக்குகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (vi) | 2018 ஆம் ஆண்டின் போது ISO சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 200,000 ஆன நிதிஏற்பாடு | ISO-9011-2015 தரச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அதிகாரசபையால் தேவையான நடவடிக்கை | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் இலக்குகளை நிறை வேற்றுவதற்கு |

மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அதிகாரசபையின் தர முகாமைத்துவ முறைமையை நிறுவுவதற்காக மதியுரையாளரின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக பத்திரிகை அறிவித்தலொன்று மாத்திரம் வெளியிடப்பட்டிருந்தது. ISO சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 71,262 தொகையும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 125,000 தொகையும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 35,880 உமாக மொத்தம் 232,142 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ISO சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

களை 2016 ஆம் ஆண்டின் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 71,262 தொகை செலவிடப்பட்டு அரசின் பெறுகை வழிகாட்டலை பின்பற்றி ISO தரச் சான்றிதழ் தொடர்பான மதியுரையாளர் ஒருவரை தெரிவுசெய்வதற்கு பத்திரிகை விளம்பரமொன்று மேற்கொள்ளப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் போது மதியுரை செயற்பாட்டில் 70% முழுமையாக இருந்தமையால் கொடுப்பனவிற்குரிய ரூபா 250,000 தொகையில் 50% ஆன ரூபா 125,000 செலுத்தப்பட்டது. எனினும் நிறுவகத்தில் இருந்த சிக்கல் காரணமாக இச்செயற்பாடு 2017 ஆம் ஆண்டின் போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. எனினும் அதிகாரசபைக்கு ISO சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு இருந்த கட்டாய தேவைப்பாட்டினால் 2018 ஆம் ஆண்டின் போது புதிய மதியுரையாளர் ஒருவரை தெரிவுசெய்வதற்கு ரூபா 16,560 செலவிடப்பட்டு தினமின பத்திரிகையிலும் ரூபா 19,320 ஔசலவிடப்பட்டு டெய்லி நியுஸ் பத்திரிகையிலும் விளம்பரமொன்று மேற்கொள்ளப்பட்டது. எனினும் நிறுவனத்தின் இறுதிக் கணக்கு மற்றும் ஆண்டறிக்கை தயாரிக்கப்படாமையால் பணிப்பாளர் சபையினால் ISO சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடு 2018 ஆம் ஆண்டில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (vii) | கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சினால் 2018 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கை திட்டத்தில் அதிகாரசபை மூலம் செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட இளைய தொழில் முயற்சியாளர் அபிவிருத்திக்காக அமைச்சினால் அதிகாரசபைக்கு ரூபா 5.7 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் மாதத்தின் போது அமைச்சினால் அந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 1.14 மில்லியன் முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒரு மாவட்டத்திலிருந்து 25 பயிலுனர்கள் வீதம் பயிற்சியளிப்பதற்கும் 180 பேருக்காக ரூபா 100,000 வீதம் விபாரம் ஆரம்பிப்பதற்காக நிதியுதவி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை மேல் மாகாணத்தில் 100 நலனாலிகள் இனங்காணப்பட்டு வியாபார திட்டம் தயாரிக்கும் 02 நாள் பயிற்சியொன்று மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் ஆண்டின் இறுதி வரை ரூபா 678,914 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சினால் 2018 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் இளைய தொழில் முயற்சியாளர் அபிவிருத்திக்காக ரூபா 5.7 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் முற்பணமாக ரூபா 1.14 மில்லியன் அதிகாரசபைக்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேல் மாகாணத்தின் தொழில் 100 நலனாலிகளுக்கு தேவையான தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சியை வழங்குவதற்கும் அதன் பின்னர் உபகரணங்களை வழங்குவதற்கும் இலக்கிடப்பட்டிருந்தது. அதிகாரசபையில் தொழில் பயிலுனர்கள் தொடர்பு படுத்தப்பட்டு மேல் மாகாணத்தின் தொழில் பயிலுனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அதில் 100 பேர் தெரிவு செய்யப்பட்டனர். இதற்காக அதிகாரசபைக்கு கூடிய காலமொன்றை செலவிடுவதற்கு நேர்ந்தது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட 100 பேருக்காக தேவையான தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. பின்னர் போதியளவு காலமொன்று இல்லாமையால் அழகு கலை பிரிவு மாத்திரம் தெரிவு செய்யப்பட்டு 28 நலனாலிகளுக்காக இயந்திர உபகரணங்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து அவை கொள்வனவு செய்யப்பட்டது. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் இலக்குகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 1.49 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் உரிய நலனாலிகளுக்கு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. | |
| (viii) | Know how செயற் திட்டத்தின் கீழ் ஒரு மாவட்டத்திற்கு 100 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்கள் இலக்கிடப்பட்டு அதன் முதலாவது கட்டத்தின் கீழ் வரியியல், வரியியல் செயற்பாடு, தொழிலாளர் தொடர்பான சட்டங்கள் மற்றம் விதிகள் மற்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் சேவைகள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த திட்டமட்டு 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 7 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் 14 மாவட்டங்களில் மாத்திரம் அந்நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதில் 06 மாவட்டங்களில் நிகழ்ச்சிதிட்டத்திற்கு 373 தொழில் முயற்சியாளர்கள் சமூகமளித்திருந்தனர். 2018 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீட்டு நிதிஏற்பாட்டில் 31 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சினால் 2018 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் இந் நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய தொழில் முயற்சி அதிகார சபை மூலம் செயற்படுத்தப் பட்டது. இதற்காக ரூபா மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 2.187 மில்லியன் செலவினமாக இருந்தது. இந்நிகழ்ச்சித்திட்டம் உள்நாட்டு இறைவரி திணக்களம், தொழில் திணைக்களம் மற்றும் பாவனையாளர் சேவை அதிகாரசபை தொடர்பாக மேற்கொள்ளப்படும் வியாபாரிகளுக்கு அறி"ட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட தொகையை பெற்றுக் கொள்வதற்கு ஆண்டின் நடுப்பகுதியில் முடியுமாக இருந்ததுடன் அதிகாரசபைக்கு 14 மாவட்டங்களில் மாத்திரம் மேற்கொள்ள இயலுமாக இருந்தது. இந் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக தேவையுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரிகள் மாத்திரம் இலக்கிடப்பட்டதால் சில நிகழ்ச்சித்திட்டங்களின் வருகை பலவீனமான | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் இலக்குகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மட்டத்தில் காணப்பட்ட போதும் நிகழ்ச்சித்திட்டங்கள் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன் சமூகமளித்தவர்கள் மிகவும் மகிழ்வுற்றனர். எஞ்சிய மாவட்டங்களில் இந் நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆம் ஆண்டின் போது நடாத்தபட்டது.